**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 24.11.2025**
**OS. No. 102/2014**
**வழக்கு சாட்சி PW.1– ஈஸ்வரி, க/பெ.ரங்கநாதன்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

3. பிராதில் வாதிகளாகிய என்னுடைய கணவர் பெயர் ரங்கநாதன் என்றும், 2,3 வாதிகளின் தந்தை பெயர் ரங்கநாதன் என்றும் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. நாங்கள் பென்னாகரம் வட்டம், சின்னவத்தலாபுரத்தில் குடியிள்ளோம் என்றும், ஆனால் பிராதில் கோனூர் கிராமம், மேட்டுர் வட்டம் என்று தவறான முகவரியை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, கோனூர் கிராமத்தில் சமத்துவபுரத்தில் தற்போது வாடகைக்கு குடியுள்ளோம். சமத்துவபுரத்தில் நாங்கள் எத்தனை வருடங்களாக குடியுள்ளோம் என்றால் 18 வருடங்களாக குடியுள்ளோம். பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சமத்துவபுரம் முகவரியை குறிப்பிடவில்லை என்றும், மங்கானூர் காட்டுவளவில் கோனூர் கிராமம் என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான், அதிலிருந்து ஒரு 3 கிலோமீட்டர் தொலைவில் சமத்துவபுரம் உள்ளது.

4. பிராதில் 1ம் பிரதிவாதியின் கணவர் பெயரும், 2ம் பிரதிவாதியின் தந்தை பெயர் கண்ணுபையன் என்று தவறாக சொல்லியுள்ளோம் என்றும், உண்மையான பெயர் ரங்கநாதன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் ரங்கநாதன் என்பவர், 1ம் பிரதிவாதியின் கணவர் என்றும், 2ம் பிரதிவாதியின் தந்தை என்றும் குறிப்பிட்டுதான் இந்த வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் அது தவறாகும். கண்ணுபையன் என்ற ஒரு நபரே இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் முழு விவரங்கள் தெரியுமா என்றால் முழுவிவரம் தெரியாது, மொத்த அளவு 3.66 ஏக்கர் நிலமாகும். அதில் 6 சென்ட் ரோட்டுக்கு கொடுத்தது போக மீதம் 3.60 ஏக்கர் ஆகும்.

5. வழக்கு சொத்து வாதிகளுக்கும், 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று வழக்கில் பொய்யாக சொல்லியுள்ளோம் என்றும், அந்த சொத்தானது 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதில்தான் 7, 8 பிரதிவாதிகள் சில பகுதிகளை கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. 1ம் வாதியாகிய என்னுடைய மாமனாரும், 1ம் பிரதிவாதியின் மாமனாரும், 2ம் பிரதிவாதியின் தாத்தாவும், 2, 3 வாதிகளின் தாத்தாவுமான சித்தகவுண்டர் என்று வழக்கில் தவறாக சொல்லியுள்ளோம் என்றும், வாதிகளுக்கும்,

சித்தகவுண்டருக்கும் எந்த உறவுமுறையும் இல்லை என்றும், 1ம் பிரதிவாதியின் மாமனார் தான் சித்தகவுண்டர் என்றால் சரியல்ல. சித்தகவுண்டருக்கு ரங்கநாதன் மற்றும் கண்ணுபையன் என்ற இரு மகன்கள் என்று வழக்கில் பொய்யாக சொல்லியுள்ளோம் என்றும், அவருக்கு ரங்கநாதன் என்ற ஒரே மகன் தான் என்றால் சரியல்ல.

6. சித்தகவுண்டரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. கண்ணுபையன் என்பவரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை, எனக்கு திருமணம் ஆவதற்கு முன்னதாகவே அவர்கள் இறந்துவிட்டார்கள். 1ம் பிரதிவாதி கண்ணுபையன் என்ற நபரை திருமணம் செய்யவில்லை என்றும், அவருடைய வாரிசுகள்தான் 1,2 பிரதிவாதிகள் என்று வழக்கில் பொய்யாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு திருமணமாகி சுமார் 33 வருடங்கள் ஆகிறது. சித்தகவுண்டர் அதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் ஆமாம். ஆனால், என் வழக்கில் வழக்கு தாக்கல் செய்வதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு சித்தகவுண்டர் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ரங்கநாதனின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன், வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை.

7. நான் ரங்கநாதனின் உண்மையான மனைவி இல்லாததாலும் 2, 3 வாதிகள் அவருக்கு பிறந்த குழந்தைகள் இல்லாததாலும் தான் என்றால் வாரிசு சான்றிதழ் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரங்கநாதனின் மகனான தனகோடி என்பவர் இயற்கை மரணம் அடையவில்லை என்றும் அவரை கொலை செய்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தின் பட்டா மற்றும் கந்தாய ரசீதுகள் ரங்கநாதனின் பெயரில் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், 1 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் தான் அனைத்து ஆவணங்களும் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தற்போதைய பட்டா நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 08.12.2025ம் தேதி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.